Registered Office
"Maithri",
No. 132, Cathedral Road,
Chennai 600 086,
India.
CIN: L65993TN2004PLC052856

Tel: 91 44 2811 2472
Fax: 91 44 2811 2449
URL; www.ranegroup.com

# Rane (Madras) Limited

**//Online Submission//**

RML/SE/28/2020-21

August 08, 2020

| | |
|---|---|
| **BSE Limited**<br>Listing Centre<br>Scrip Code: | **National Stock Exchange of India Ltd.**<br>NEAPS<br>Symbol: **RML** |

Dear Sir / Madam,

**Sub: Newspaper publication of Unaudited Financial Results – Regulation 47 of SEBI LODR**

We hereby enclose copies of extract of the unaudited (standalone & consolidated) financial results of the Company for the quarter ended June 30, 2020 (UFR) published on August 08, 2020, in the newspapers, viz., 'Business Standard' (English) and 'Dinamani' (Regional language).

We request you to take the above on record and note the compliance under relevant provisions of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (SEBI LODR).

Thanking you.

Yours faithfully,

For **Rane (Madras) Limited**

S SUBHA SHREE
Digitally signed by S SUBHA SHREE
Date: 2020.08.08 21:15:57 +05'30'

**S Subha Shree**
Secretary

Encl: a/a

# கரோனா: ரூ.103 கோடியில் 500 ஆம்புலன்ஸ்கள்

## ஆம்புலன்ஸ் ஓட்டுநர், அவசரகால பணியாளர்களுக்கு தலா ரூ.5,000 ஊக்கத் தொகை: முதல்வர்

**திருநெல்வேலி, ஆக. 7:** தமிழகத்தில் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை சிகிச்சைக்கு அழைத்துச் செல்வதற்காக ரூ.103 கோடியில் 500 ஆம்புலன்ஸ்கள் வாங்கப்பட்டுள்ளதாக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள 108 ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் மற்றும் அவசரகால பணியாளர்களுக்கு தலா ரூ.5 ஆயிரம் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் எனவும் முதல்வர் அறிவித்தார்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் கரோனா தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்ட முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி, பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கரோனா தொற்று காலத்திலும் கூட, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களுடன் சுமார் ரூ.30 ஆயிரம் கோடி மதிப்பில் 40 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு தொழில் முதலீட்டை ஈர்த்திருக்கிறோம்.

இதன்மூலம் சுமார் 67 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்துள்ளோம்.

தென் மாவட்டங்களில் புதிதாக தொழில் தொடங்க விரும்பினால் நிலத்தின் மதிப்பில் பாதியளவு மானியமாகக் கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், தொழிற்சாலை அமைப்பதற்கும் மானியம்வழங்குகிறோம். தொழில் தொடங்குவதற்கான அனுமதியை 'ஒற்றைச்சாளர முறை' என்ற திட்டம் மூலம் எவ்வித தடையுமில்லாமல், குறிப்பிட்ட காலத்துக்குள், மிக விரைவாக அரசு வழங்குகிறது. எனவே, எவ்வித சிரமமும் இல்லாமல் தொழில் தொடங்கலாம்.



திருநெல்வேலியில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசுகிறார் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி.

**ரூ.103 கோடியில் ஆம்புலன்ஸ்:** தமிழகத்தில் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை சிகிச்சைக்கு அழைத்து வருவதற்காக ரூ.103 கோடியில் 500 ஆம்புலன்ஸ்கள் வாங்கப்பட்டுள்ளன. மேலும், ஆம்புலன்ஸ் ஓட்டுநர், ஆம்புலன்ஸில் பணிபுரியும் அவசரகால பணியாளர்களுக்கு தலா ரூ.5 ஆயிரம் ஊக்கத் தொகை வழங்கப்படும்.

தமிழகத்தில் பணிபுரிந்த வெளிமாநிலத்தொழிலாளர்களில், சொந்த மாநிலத்துக்கு திரும்ப வேண்டும் என்று விண்ணப்பித்தவர்களை, அவர்களுடைய சொந்த மாநிலங்களுக்கு அரசின் செலவிலேயே ரயில் மூலம் அனுப்பி வைத்தோம்.

அவ்வாறு திரும்பிச் சென்ற வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீண்டும் தமிழகத்தில் பணிபுரிய விரும்புவதாக தொழில் நிறுவனத்தினர் தெரிவித்ததாக மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து அவர்களுக்கு அனுமதி வழங்கலாம் என்ற உத்தரவும் அரசால் வழங்கப்பட்டு உள்ளது. அவ்வாறு வருகை தரும் வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் கரோனா நோய்த்தொற்றுப் பரிசோதனை செய்யப்படும். தொற்று உறுதி செய்யப்பட்டால் அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படும். தொற்று இல்லாதவர்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நேரடியாகப் பணியில் அமர்த்திக் கொள்ளலாம்.

**இ-பாஸ் நடைமுறை:** இ-பாஸ் வழங்குவதற்கான நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளது. இ-பாஸ் வழங்குவதில் எவ்வித பிரச்னையும் ஏற்படாதவாறு தெளிவான உத்தரவை அரசு வழங்கியுள்ளது. இங்குள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீண்டும் தமிழகத்தில் பணியாற்ற விரும்பினால் அவர்களை தாராளமாக அழைத்து வரலாம். அவர்களின் பெயர், முகவரி போன்ற விவரங்களை அளித்தால், மாவட்ட ஆட்சியர் இ-பாஸ் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார். மாதம் ஒருமுறை அதை புதுப்பித்தால் போதும். அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்பவர்களுக்கு உடனடியாக இ-பாஸ் வழங்க ஏற்கெனவே ஒரு குழு இயங்கி வருகிறது. இந்த நிலையிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கூடுதலாக ஒரு குழு அமைத்து, இரண்டு குழுக்கள் இயங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மண்டல அளவில் இ-பாஸ் தேவையில்லை என்று அறிவித்த பிறகுதான் அதிகளவில் கரோனா பரவியது. இது உயிர் சம்பந்தப்பட்ட பிரச்னை. அதனால் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. கடும் நடவடிக்கைகள் காரணமாக இப்போது, கரோனா தடுப்புப் பணிகளில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகம் உள்ளது. இறப்பு சதவீதம் குறைந்திருக்கிறது, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. தற்போதைய நிலையில் இ-பாஸ் நடைமுறையை ரத்து செய்யும் திட்டமில்லை.

அண்டை மாநிலங்களில் கரோனா இறப்பு சதவீதம் அதிகரித்து வருகிறது. அந்த மாநிலங்களில் 25,000 பேருக்கு கரோனா பரிசோதனை மேற்கொண்டால், 10 ஆயிரம் பேருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் அப்படியில்லை. மாநிலம் முழுவதும் ஒரு நாளைக்கு சுமார் 62,000 கரோனா பரிசோதனை செய்யப்படுகிறது. அதில், 5,200 பேருக்குத்தான் கரோனா தொற்று உறுதியாகிறது. கரோனா பரவலை படிப்படியாக குறைத்து, இயல்பு நிலை திரும்புவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய கல்விக் கொள்கை தொடர்பாக தமிழக அரசு குழுவை அமைத்துள்ளது. அந்தக் குழுவின் அறிக்கை அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோல் மத்திய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு அறிக்கை தொடர்பாகவும் ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளது.

**மழை பாதிப்பு:** நீலகிரி மாவட்டத்தில் கனமழைக்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கு பாதிப்புகளைப் பார்வையிட இரு அமைச்சர்களை அனுப்பியிருக்கிறோம். இதேபோல் மற்ற மாவட்டங்களிலும் மழையை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றார் முதல்வர்.

### 2021-இல் யார் ஆட்சி என்பதை மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்

2021 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக ஆட்சிக்கு வரும் என அக்கட்சித் தலைவர் ஸ்டாலின் கூறியிருக்கிறாரே என முதல்வர் எடப்பாடி பழனிசாமியிடம் கேட்டபோது, '2021-இல் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை மக்கள் முடிவு செய்வார்கள். அதை ஸ்டாலின் முடிவு செய்ய முடியாது' என்றார்.

இதேபோல், கருணாநிதியின் 2-ஆவது ஆண்டு நினைவு தினமான இந்த தினத்தில் அவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டபோது, 'அவர் ஒரு மூத்த அரசியல் தலைவர். அவருடைய மறைவு அந்தக் கட்சிக்கு மிகப் பெரிய இழப்பாகும்' என்றார்.

## ரூ.43 ஆயிரத்தை தாண்டியது ஆபரணத் தங்கம்

**சென்னை, ஆக.7:** சென்னையில் வெள்ளிக்கிழமை பவுன் ஆபரணத் தங்கத்தின் விலை ரூ.43 ஆயிரத்தை தாண்டி, வரலாறு காணாத புதிய உச்சத்தைத் தொட்டது. பவுனுக்கு ரூ.336 உயர்ந்து, ரூ.43,328-க்கு விற்பனை செய்யப்பட்டது. நிகழாண்டில் ஜனவரி 3-ஆம் தேதி முதல் தற்போது (ஆகஸ்ட் 7) வரை கடந்த ஏழு மாதத்தில் மட்டும் தங்கம் பவுனுக்கு ரூ.12,808 வரை உயர்ந்துள்ளது. அதிலும், ஜூலை 21-ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 7-ஆம் தேதிவரை மட்டும் ரூ.5,712 வரை உயர்ந்துள்ளது.

கரோனா நோய்த்தொற்றின் தாக்கம், தொழில்துறையில் தேக்கம், அமெரிக்காவில் வேலைவாய்ப்பு குறியீடு சரிவு உள்பட பல்வேறு காரணிகளால் தங்கம் விலை படிப்படியாக உயர்ந்து வந்தது.

ஒரு பவுன் ஆபரணத் தங்கம் ஜூலை 24-ஆம் தேதி ரூ.39 ஆயிரத்தையும், 27-ஆம் தேதி ரூ.40 ஆயிரத்தையும், 31-ஆம் தேதி ரூ.41 ஆயிரத்தையும், ஆகஸ்ட் 5-ஆம் தேதி ரூ.42 ஆயிரத்தையும் கடந்து, புதிய உச்சத்தைத் தொட்டது. இதன் பிறகும் தங்கம் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், சென்னையில் வெள்ளிக்கிழமை தொடர்ந்து 16-ஆவது நாளாக ஆபரணத்தங்கத்தின் விலை உயர்ந்தது. அதாவது பவுன் விலை ரூ.43 ஆயிரத்தை தாண்டி, வரலாறு காணாத புதிய உச்சத்தைத் தொட்டது. பவுனுக்கு ரூ.336 உயர்ந்து, ரூ.43,328-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிராம் தங்கம் ரூ.42 உயர்ந்து, ரூ.5,416 ஆக இருந்தது. இதுபோல, வெள்ளி விலையும் உயர்வைச் சந்தித்தது. வெள்ளி கிராமுக்கு ரூ.2 உயர்ந்து, ரூ.83.60 ஆகவும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.2,000 அதிகரித்து, ரூ.83,600 ஆகவும் இருந்தது.

**வெள்ளிக்கிழமை**
**விலை ரூபாயில் (ஜி.எஸ்.டி. தனி)**

| | |
|---|---|
| 1 கிராம் தங்கம் | 5,416 |
| 1 பவுன் தங்கம் | 43,328 |
| 1 கிராம் வெள்ளி | 83.60 |
| 1 கிலோ வெள்ளி | 83,600 |

**வியாழக்கிழமை**
**விலை ரூபாயில் (ஜி.எஸ்.டி)**

| | |
|---|---|
| 1 கிராம் தங்கம் | 5,374 |
| 1 பவுன் தங்கம் | 42,992 |
| 1 கிராம் வெள்ளி | 81.60 |
| 1 கிலோ வெள்ளி | 81,600 |

# கருணாநிதி நினைவிடத்தில் மு.க.ஸ்டாலின் மரியாதை

## திமுகவை ஆட்சியில் அமர்த்துவதாகவும் சூளுரை

**சென்னை, ஆக.7:** மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 2-ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி, கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

திமுகவை 6-ஆம் முறையாக அரியணையில் ஏற்றுவதாகவும் அவர் சூளுரைத்தார்.

மறைந்த கருணாநிதியின் 2-ஆம் ஆண்டு நினைவு தினம் வெள்ளிக்கிழமைகடைப்பிடிக்கப்பட்டது. அதையொட்டி, மெரீனா கடற்கரையில் உள்ள அவர் நினைவிடம் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. நினைவிடத்தில் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அவரைத் தொடர்ந்து பொருளாளர் துரைமுருகன், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, துணைத் தலைவர் கனிமொழி, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, செய்தித் தொடர்பு செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், இளைஞரணிச் செயலாளர் உதயநிதி, மாவட்டச் செயலாளர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், வர்த்தக அணிச் செயலாளர் காசிமுத்து மாணிக்கம் உள்பட பலர் மரியாதை செலுத்தினர்.



முன்னாள் முதல்வர் கருணாநிதியின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது நினைவிடத்தில் வெள்ளிக்கிழமை மரியாதையை செலுத்திய திமுக தலைவர் ஸ்டாலின், பொருளாளர் துரைமுருகன், மாநில மகளிரணி செயலாளர் கனிமொழி உள்ளிட்டோர்.

கருணாநிதி ஆட்சியின் சாதனைகளைக் குறிப்பிடும் வகையில் பதாகையைக் கையில் ஏந்தி மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் முழக்கங்கள் எழுப்பினர். அண்ணா நினைவிடத்திலும் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

கரோனா தடுப்புப் பணியில் ஈடுபடும் முன்களப் பணியாளர்களான மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரத் துறை ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு பூச்செண்டு கொடுத்து, நலத்திட்ட உதவிகளையும் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

கருணாநிதியின் கோபாலபுரம் இல்லம், அறிவாலயம், சிஐடி காலனி இல்லம், முரசொலி அலுவலகம் ஆகியவற்றிலும் கருணாநிதியின் படத்துக்கு மலர் தூவி மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

**ஆட்சியில் அமர்த்துவோம்:** இதைத் தொடர்ந்து மு.க.ஸ்டாலின் காணொலியில் ஆற்றிய உரை:

எங்கெங்கு காணினும் கருணாநிதியைப் பார்க்கிறேன். அவர் மறைவை இன்னும் இதயம் ஏற்க மறுக்கிறது. வங்கக் கடலோரம் அவர் நீடுதுயில் கொள்ளச் சென்று இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த இரண்டு ஆண்டுகளில் ஏராளமான வெற்றியைப் பெற்றுள்ளோம். சட்டப்பேரவையிலும், மக்களவையிலும், மாநிலங்களவையிலும் திமுகவின் வலிமை உயர்ந்துள்ளது. நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக திமுக அமர்ந்துள்ளது. பல்லாயிரக்கணக்கான பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளைக் கைப்பற்றி இருக்கின்றனர். 6-ஆம் முறையாக திமுகவை அரியணை ஏற்ற உங்கள் நினைவுநாளில் சூளுரை ஏற்கிறோம்.

மாநில அரசுக்கு எதிராகவும், மத்திய அரசுக்கு எதிராகவும் சளைக்காமல் மோதிக் கொண்டு இருக்கிறோம். இதில், வெல்வோம் என்றார்.

மேலும், திருக்குவளையில் அமைக்கப்பட்டுள்ள கருணாநிதியின் மார்பளவுச் சிலையை மு.க.ஸ்டாலின் அவரது ஆழ்வார்ப்பேட்டை இல்லத்தில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். கருணாநிதி நினைவிடத்தில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ உள்பட பல்வேறு கட்சித் தலைவர்களும் மரியாதை செலுத்தினர்.

## கடலூரில் மேலும் 213 பேருக்கு கரோனா: 3 பேர் பலி

**கடலூர், ஆக. 7:** கடலூர் மாவட்டத்தில் புதிதாக 213 பேருக்கு கரோனா தொற்று வெள்ளிக்கிழமை உறுதியான நிலையில், மேலும் 3 பேர் உயிரிழந்தனர்.

மாவட்டத்தில் வியாழக்கிழமை வரை 4,227 பேருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், வெள்ளிக்கிழமை வெளியான மருத்துவப் பரிசோதனை முடிவுகளில் புதிதாக 213 பேருக்கு தொற்று உறுதியானது. இதனால், பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4,440-ஆக உயர்ந்தது. புதிதாக தொற்று உறுதியானவர்களில் 2 மருத்துவர்கள், 10 காவலர்கள், விசாரணைக் கைதிகள் 3 பேரும் அடங்குவர்.

கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் வெள்ளிக்கிழமை 3 ஆண்கள் உயிரிழந்ததால் பலியானவர்களின் மொத்த எண்ணிக்கை 57-ஆக உயர்ந்தது. உயிரிழந்தவர்களில் கம்மாபுரத்தைச் சேர்ந்த 59 வயது நபர் கடலூர் அரசு மருத்துவமனையிலும், பண்ருட்டியைச் சேர்ந்த 54 வயது நபர் சிதம்பரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், நல்லூரைச் சேர்ந்த 74 வயது நபர் திருச்சியிலுள்ள தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வந்தனர்.

மேலும், 115 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியதால் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2,372-ஆக உயர்ந்தது.

# குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்: புகார் கொடுக்க புதிய செல்லிடப்பேசி எண்

**சென்னை, ஆக.7:** பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் வகையில் பொதுமக்கள் தொடர்புகொள்ள புதிய செல்லிடப்பேசி எண்ணை காவல்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக சென்னை பெருநகர காவல்துறையின் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்புப் பிரிவு வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

சென்னையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இக் குற்றங்கள் தொடர்பாக பொதுமக்களிடம் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது.

பொதுமக்கள் காவல்துறையை விரைந்து தொடர்பு கொள்ளும் வகையிலும் இக் குற்றங்கள் தொடர்பான தகவல்களை உடனே பெறும் வகையிலும் 91502 - 50665 என்ற செல்லிடப்பேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த எண் வெள்ளிக்கிழமை முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. எனவே பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக இந்த செல்லிடப்பேசி எண்ணை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.


**புரொபஷனல் கூரியர்ஸ் நெட்வொர்க் லிமிடெட்**
CIN : U74950TN2007PLC062401
அல்-பரக்கா டவர்ஸ், புதிய எண். 10, கே.பி.தாசன் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600018. Ph. 044 - 4231 6425
மெயில் : investor.relations@pcnl.in, இணையதளம்: www.pcnl.in

நிறுவன விவகாரங்கள் அமைச்சக மூலம் கிடைக்கப்பெற்ற சுற்றறிக்கை எண்: 14, தேதி 8 ஏப்ரல் 2020, எண்: 17, தேதி 13 ஏப்ரல் 2020 மற்றும் எண்: 20, தேதி 05, மே 2020ன் படி தங்களுக்கு 31.03.2020 வருடத்திற்கான தணிக்கை ...

பங்குதாரர்கள் எவரேனும் டீமாட் கணக்கு வைத்து இருந்தால், அவர்கள் புதிதாக மற்றொரு டீமாட் கணக்கு திறக்க வேண்டிய அவசியமில்லை.

புரொபஷனல் கூரியர்ஸ் நெட்வொர்க் லிமிடெட்-காக
தாமஸ் ஜான், சேர்மேன்
DIN: 00564486
நாள்: 29.07.2020
இடம்: சென்னை



Indian Bank / ALLAHABAD
கார்பொரேட் அலுவலகம்.
254-260, அவ்வை சண்முகம் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.

**அறிவிப்பு**

ஜூன் 30, 2020 உடன் முடிவடைந்த வங்கியின் காலாண்டிற்கான (சார்பற்ற மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட) தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கையை அங்கீகரிக்க, ஆகஸ்ட் 14, 2020, வெள்ளிக்கிழமை அன்று கூடும் வங்கியின் இயக்குநர்களின் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்று செபி (லிஸ்டிங் ஆப்ளிகேஷன்ஸ் & டிஸ்க்ளோஷர் ரிக்வயர்மெண்ட்ஸ்) ரெகுலேஷன்ஸ், 2015- இன் படி இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இதன் விவரங்களை வங்கியின் இணையதளமான www.indianbank.in என்பதிலும், பங்குச் சந்தைகளின் இணையதளமான www.nseindia.com மற்றும் www.bseindia.com என்பதிலும் காணலாம்.

இடம்: சென்னை
நாள்: ஆகஸ்ட் 07, 2020
தினா நாத் குமார்
உதவி பொது மேலாளர் & கம்பெனி செக்ரெட்டரி



Rane
ரானே (மதராஸ்) லிமிடெட்
CIN: L65993TN2004PLC052856
பதிவு அலுவலகம்: "மைத்ரி", 132, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086. Visit us at: www.ranegroup.com

**ஜூன் 30, 2020 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தனிப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

(ரூபாய் லட்சத்தில் பங்கு தகவல்கள் தவிர)

| வ. எண் | விவரங்கள் | தனிப்பட்ட: காலாண்டிற்கான | | | தனிப்பட்ட: ஆண்டிற்கான | ஒருங்கிணைந்த: காலாண்டிற்கான | | | ஒருங்கிணைந்த: ஆண்டிற்கான |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்பட்ட |
| | | 30.06.2020 | 31.03.2020 | 30.06.2019 | 31.03.2020 | 30.06.2020 | 31.03.2020 | 30.06.2019 | 31.03.2020 |
| 1. | இயக்கத்திலிருந்து மொத்த வருமானம் | 9,264.81 | 24,920.18 | 29,590.37 | 110,052.76 | 10,992.45 | 28,576.07 | 34,485.52 | 127,707.56 |
| 2. | நிகர லாபம் வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு முன் லாபம் / (நஷ்டம்) | (3,210.04) | 315.87 | 490.33 | 1,412.84 | (5,209.98) | (1,566.25) | (860.89) | (4,256.36) |
| 3. | நிகர லாபம் வரிக்கு முன் லாபம் / (நஷ்டம்) (விதிவிலக்கான இனங்களுக்கு பின்) | (3,210.04) | (3,441.67) | 490.33 | (2,344.70) | (5,209.98) | (1,762.65) | (860.89) | (4,452.76) |
| 4. | இந்தக்காலத்திற்கான நிகர லாபம் / நஷ்டம் வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு பின் | (2,190.87) | (3,409.90) | 324.40 | (2,443.03) | (4,190.81) | (1,731.08) | (1,026.82) | (4,551.13) |
| 5. | இந்தக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (இந்தக்காலத்திற்கான உள்ளடக்கிய லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் விரிவான வருமானம் (வரிக்கு பின்) | (2,096.89) | (3,775.26) | 311.52 | (2,884.11) | (4,412.41) | (3,174.96) | (1,124.57) | (6,482.97) |
| 6. | பங்கு மூலதனம் | 1,255.39 | 1,255.39 | 1,197.32 | 1,255.39 | 1,255.39 | 1,255.39 | 1,197.32 | 1,255.39 |
| 7. | கையிருப்புகள் (மறுமதிப்பு கையிருப்பு நீங்கலாக) முந்தைய ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலையில் காட்டப்பட்டுள்ளபடி | | | | 28,837.93 | | | | 17,131.49 |
| 8. | பங்கு ஒன்றுக்கு வருமானம் (EPS) (ரூ.10/- வீதம்) (அ) அடிப்படை | (17.45) | (28.30) | 2.71 | (20.37) | (33.38) | (14.37) | (8.58) | (37.95) |
| | (ஆ) நீர்த்த மதிப்பு | (15.97) | (24.86) | 2.71 | (19.59) | (30.56) | (12.62) | (8.58) | (36.49) |

மேலே உள்ளது 2015-ஆம் வருடத்திய SEBI அமைப்பின் ஒழுங்குமுறை விதிகளின், ஒழுங்குமுறை விதி 33-ன்கீழ் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) பங்குச்சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட, தனிப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை காலாண்டு நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் எடுபகுதி ஆகும். தனிப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் பங்குச்சந்தைகளின் இணையதளங்களான www.bseindia.com, www.nseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளமான www.ranegroup.com என்ற முகவரியில் கிடைக்கும்.

குறிப்புகள் :

1. மேலே உள்ள நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு, இயக்குநர்கள் குழுவினால் முறையே 2020 ஆகஸ்ட் 07 அன்று நடைபெற்ற அவர்களுடைய கூட்டங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
2. நிறுவனம் / குழு அதன் மொத்த முதலீடு, கடன்கள் மற்றும் பிற நிதிச் சொத்துக்கள் / நிகர சொத்துக்களின் மீட்டெடுக்கும் மதிப்பை ஒரு முழு இயக்கத்திற்கு சொந்தமான துணை நிறுவனத்தில் (நேரடியாகவோ அல்லது இடைநிலை துணை நிறுவனம் மூலமாகவோ) மதிப்பீட்டுள்ளது மற்றும் ஒரு குறைபாட்டிற்கு ரூ. 3757.54 லட்சம் மார்ச் 31, 2020 உடன் ...

சென்னை
ஆகஸ்ட் 07, 2020
ரானே (மதராஸ்) லிமிடெட்டிற்காக
எல். கணேஷ்
தலைவர்



தமிழ்நாடு அரசு
**4.54 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2023 மற்றும் 6.49 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2050**
மறுவெளியீடு ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்

1. தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.2000.00 கோடி மதிப்பிற்கு 4.54 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2023 ரூ.1000.00 கோடி மற்றும் 6.49 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2050 ரூ.1000.00 கோடி ஏலத்தின் மூலம் மறுவெளியீடு செய்ய முன்வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் ரூ.10,000/–க்கும் அதன் பின்னர் ரூ.10,000/–ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் ஆகஸ்ட் 11, 2020 அன்று இந்த ஏலத்தை நடத்தும்.
2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் (இணைப்பு–II)ன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலம் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்ப்பிக்கலாம்.
3. ஆர்வமுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) ஆகஸ்ட் 11, 2020 அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்ப்பிக்கலாம்:
அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும்.
ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. ஏலம் கேட்பவர் எதிர்பார்க்கக் கூடிய விலையினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரியப்படுத்த வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.
5. ஏலத்தின் முடிவுகள் ஆகஸ்ட் 11, 2020 அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணைய தளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அல்லது சென்னையில் செலுத்தத்தக்க வகையிலான வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) ஆகஸ்ட் 12, 2020 அன்று வங்கிப்பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
6. இந்த அரசு பிணையப் பத்திரங்களுக்கு முறையே ஆண்டிற்கு 4.54 சதவீதத்தில் வட்டி 6 மாதத்திற்கு ஒரு முறை ஜனவரி 08 மற்றும் ஜூலை 08, 6.49 சதவீதத்தில் வட்டி 6 மாதத்திற்கு ஒரு முறை ஜனவரி 22 மற்றும் ஜூலை 22 ஆகிய தேதிகளில் வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.
7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.
8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் ஆகஸ்ட் 07, 2020 நாளிட்ட பிரத்யேக அறிவிக்கை எண்.500(L)/W&M-II/2020 மற்றும் 501(L)/W&M-II/2020–ஐக் காண்க.

ச. கிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை–9.
செ.ம.தொ.இ/666/வரைகலை/2020


வெள்ளிதோறும் தினமணியுடன்... வெள்ளி மணி

## GREENPLY INDUSTRIES LIMITED

Regd. Office: Makum Road, Tinsukia, Assam - 786 125
Phone: 033 3051 5000, Fax: 033 3051 5010
Website: www.greenply.com, E-mail: investors@greenply.com
CIN: L20211AS1990PLC003484

**NOTICE**

Notice is hereby given pursuant to Regulation 29 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 that a meeting of the Board of Directors of Greenply Industries Limited will be held on Friday, the 14th August, 2020, to transact, *inter alia*, the following businesses;

1. To consider, approve and take on record the Un-audited financial results of the Company for the quarter ended on 30th June, 2020.
2. To consider issue of equity shares of the Company through Employees Stock Option Plan (ESOP).

This is to inform that, pursuant to the provisions of the SEBI (Prohibition of Insider Trading) Regulations, 2015 (PIT Regulations) and Company's Code of Conduct for Prohibition of Insider Trading, the Trading Window for dealing in shares of the Company has already been closed with effect from 1st April, 2020 and will be reopened on 16th August, 2020 after expiry of 48 hours of submitting the above referred Financial Results of the Company to the Stock Exchanges on 14th August, 2020.

The said Notice may be accessed on the Company's website at http://www.greenply.com/investors and may also be accessed on the Stock Exchange websites at http://www.bseindia.com and https://www.nseindia.com

**For Greenply Industries Limited**
**Sd/-**
**Kaushal Kumar Agarwal**
**Company Secretary &**
**Vice President-Legal**

**Place : Kolkata**
**Dated : 7th August, 2020**

## HITECH CORPORATION LIMITED

**CIN : L28992MH1991PLC168235**
Regd. Office : 201 Welspun House, Kamala City, Senapati Bapat Marg, Lower Parel (West), Mumbai - 400 013.
Tel. No. :+91 22 4001 6500 / 2481 6500 | Fax : +91 22 2495 5659
Website : www.hitechgroup.com | email : investor.help@hitechgroup.com

**NOTICE**
**FOR THE ATTENTION OF SHAREHOLDERS OF HITECH CORPORATION LIMITED**

The Ministry of Corporate Affairs ("MCA") and the Securities Exchange Board of India ("SEBI") vide various circulars have permitted listed companies to send the Notice of Annual General Meeting ("AGM"), Annual Report & other communications to shareholders in electronic form in view of the prevailing COVID-19 pandemic situation and difficulties involved in dispatch of physical copies. Sending Notice of AGM and Annual Report through email shall be sufficient compliance of the provisions of the Companies Act, 2013, Rules framed thereunder and the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.

We request the members of Hitech Corporation Limited ("the Company'), who have not yet registered/updated their email address or bank account details, to register/update the same in following manner;

i) in case the shares are held in electronic form, with the Depository through their Depository Participant(s) and

ii) in case shares are held in physical form, by writing to the Company's Registrar & Transfer Agent (RTA), M/s Link Intime India Private Limited, C-101, 247 Park, L.B.S. Road, Vikhroli (West), Mumbai – 400 083, Maharashtra. Email: rnt.helpdesk@linkintime.co.in Telephone:49186000

Further, for the convenience of the Members, the Company has enabled a process and developed a web portal, to register/update email Ids of the shareholders, for limited purpose of receiving the Company's Annual Report and Notice of the AGM (including remote e-voting instructions) electronically. The members may temporarily update their email address on or before 31st August, 2020 by accessing the link https://linkintime.co.in/emailreg/email_register.html. and following the instructions therein.

The Company has also sent SMS alerts through the RTA, to those shareholders whose mobile numbers are available with the Company. The Members are requested to respond to the SMS by clicking the link provided therein and register their email Id & other details for receiving AGM Notice/Annual Report 2020 and other communications from the Company, electronically.

No action is required from shareholder whose email address and mobile number are already registered/updated.

**For and on behalf of the Board**
**Sd/-**
**Namita Tiwari**
**Company Secretary**

**Place : Mumbai**
**Date : 07th August, 2020**

## IFB AGRO INDUSTRIES LIMITED

**CIN:** L01409WB1982PLC034590
**Regd. Office:** Plot No.-IND-5, Sector-1, East Calcutta Township, Kolkata- 700 107
**Phone:** 033-39849675, **Fax:** 033-2442-1003
**Email:** complianceifbagro@ifbglobal.com **Website:** www.ifbagro.in

**NOTICE**

Members are hereby informed that the **38th Annual General Meeting (AGM)** of the Company will be held on **Friday, 4th Day of September, 2020 at 12.45 PM** through video conferencing ('VC') or Other Audio Visual Means (OAVM) in conformity with the applicable provisions of the Companies Act, 2013 ('the Act') and the Rules thereunder read with the Circulars issued by the Ministry of Corporate Affairs, Government of India in accordance with the provisions of aforesaid circulars.

The Notice of 38th AGM along with Annual Report 2019-2020, in accordance with the applicable regulatory requirements, will be sent through electronic mode on or before 12th August, 2020 to those Members whose email addresses are either registered with the Company or with the Depositories. The said AGM Notice and Annual Report 2019-2020 will also be available on the Company's website www.ifbagro.in and on the websites of National Stock Exchange of India Limited (www.nseindia.com) and BSE Limited (www.bseindia.com) where the Company's shares are listed.

In terms of Section 108 of the Act read with Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014, the Resolutions for consideration at the 38th AGM will be transacted through remote e-voting (facility to cast vote prior to the AGM) and also e-voting during the AGM for which purpose the services of National Securities Depository Limited ('NSDL') have been engaged by the Company.

The Members are hereby informed that in compliance with the aforementioned circulars, the notices of virtual AGM shall be sent to all the shareholders through email who have registered the same with the Company. Considering the pandemic situation, the Company shall be providing service of documents to the shareholders, only through email. Hence, the Company requests all the Members who hold shares in Physical form or who have not registered their email addresses and wish to participate in the AGM or cast their votes through remote e-voting or e-voting during the meeting, to register the same with the Company within 3 days of service of this public advertisement.

The Members may obtain their user ID and password by registering their email addresses with IFB Agro Industries Limited at complianceifbagro@ifbagro.in or with CB Management Services Pvt. Ltd at rta@cbmsl.com together with scanned copies signed request letter mentioning their name and DP ID and Client ID/ Folio number and self-attested PAN Card/Aadhar Card/Driving License etc.

**By the order of the Board of Directors**
**Sd/-**
**Ritesh Agarwal**
**Company Secretary**

**Place: Kolkata**
**Date: 06/08/2020**

## BHAGERIA INDUSTRIES LTD.

(CIN : L40300MH1989PLC052574)
**Regd. Office :** 1002, 10th Floor, Topiwala Centre, Off **S.V. Road,** Goregaon (West), Mumbai 400 062. **Phone No.**+91-22-4043 6666, **Fax No.**+91-22-4043 6662, **Email id:** info@bhageriagroup.com
**Website ;** www.bhageriagroup.com

**NOTICE OF THE 31st ANNUAL GENERAL MEETING, E-VOTING INFORMATION AND BOOK CLOSURE**

**NOTICE is hereby given that:**

1. The **31st Annual General Meeting ("AGM")** of the Company is scheduled to be held on **Saturday, 29th August 2020 at 11.00 a.m.** through Video Conferencing / other audio visual means ("VC/OAVM") facility to transact the matters as stated in the Notice convening the meeting.
2. In view of the continuing Covid-19 pandemic and pursuant to General Circular Nos.14/2020, 17/2020 and 20/2020 dated 8th April 2020, 13th April 2020 and 5th May 2020, respectively, issued by the Ministry of Corporate Affairs ("MCA Circulars") and Circular No. SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 dated 12th May 2020 issued by the Securities and Exchange Board of India ("SEBI Circular") and in compliance with the provisions of the Companies Act, 2013 ("The Act") and the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("Listing Regulations"), the **31st Annual General Meeting ("AGM")** of the Company is being conducted on **29th August, 2020 at 11:00 am (IST)** through Video Conferencing (VC) / Other Audio Visual Means (OAVM) Facility, which does not require physical presence of members at a common venue.
3. The Notice of AGM and Annual Report for 2020 have been sent electronically only to all members whose email IDs are registered with the Company / Depository Participant(s). The same are also available on the website of the Company at **www.bhageriagroup.com,** website of BSE Limited at **www.bseindia.com** and National Stock Exchange of India limited at **www.nseindia.com.**
4. Pursuant to the provisions of Section 108 of the Companies Act, 2013 and Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014, as amended, and Regulation 44 of SEBI (Listing Obligations and Disclosure Requirements), Regulations, 2015, the Company is providing the facility of remote e-Voting (before the AGM) as well as e-Voting during the AGM to its Members in respect of the business to be transacted at the AGM. The facility of casting votes by a Member using remote e-Voting system (before the AGM) as well as e-Voting during the AGM will be provided by Central Depository Services (India) Ltd. ("CDSL").
